நகராட்சி அலுவலகம்
பொன்னேரி.

கூட்டம் எண். 04 / 2025 நாள்: 25.06.2025

# சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30.06.2025 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் மே 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பதிவுசெய்யலாம்

நகர்மன்ற தீர்மான எண் 719 நாள் 30.06.2025

தீர்மானம் : மன்றம் பார்வையிட்டு பதிவி செய்கிறது .

**பொருள் எண் 2**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் மே 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** பதிவுசெய்யலாம்.

நகர்மன்ற தீர்மான எண் 720 நாள் 30.06.2025

தீர்மானம் : மன்றம் பார்வையிட்டு பதிவி செய்கிறது .

**பொருள் எண் 3**

திருவள்ளூர்மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தைவளர்ச்சி திட்டத்தின் கீழ் பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட 7 அங்கன்வாடி மையங்களில் ரூ.36,000/- மதிப்பீட்டில் புதிய குழந்தை நேய கழிவறை கட்டுவதற்கு இவ்வலுவலக கடித எண் 931/2024/இ1 நாள் 12.05.2025 ன்படி 29.05.2025 அன்று மறுஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் மன்றத்தின் பார்வைக்கு

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்**

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 21 கும்மங்கலம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 2 | வார்டு எண் 1 குன்னமஞ்சேரி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | | |
| 3 | வார்டு எண் 16 பொன்னேரி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | | |
| 4 | வார்டு எண் 7 திருவாயர்பாடி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | திரு.பி. ஜோதீஸ்வரன் | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீசாய் என்டர்பிரைசஸ் | 3.33 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | வார்டு எண் 4 சின்னக்காவணம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | திரு.பி. ஜோதீஸ்வரன் | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீசாய் என்டர்பிரைசஸ் | 1.14 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | வார்டு எண் 2 பெரியகாவணம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 7 | வார்டு எண் 23 வெள்ளோடை அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 36000 | திரு.பி. ஜோதீஸ்வரன் | 0.14 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீசாய் என்டர்பிரைசஸ் | 3.15 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு**

1. மேற்படி 7 பணிகளில் வரிசை எண். 4, 5 மற்றும் 7 ல் உள்ள 3 பணிகளுக்கு மட்டும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

2. வரிசை எண் 1 முதல் 3 வரை மற்றும் 6 ல் உள்ள பணிகளுக்கு மறுஒப்பந்தபுள்ளி கோரியது மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்931/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **721** நாள் **30.06.2025**

தீர்மானம் : 1 – 3 பணிகளுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

2. 1 to 3 & 6 பணிகளுக்கு மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 4**

**பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி** 2024-25-**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண்** 864/2024/இ1 **நாள்**29.05.2025 **அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு**.

| வ. எண் | பணிகளின் பெயர் பொதுநிதி 2024–25 | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 16, சிவராஜ் தெரு, சிவராஜ் குறுக்கு தெரு மற்றும் இரயில்நிலையம் 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 11.40 | ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 2 | வார்டு எண் 19, நாடார்ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள இடுகாடு அபிவிருத்தி பணி | 19.50 | திரு.பி. ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | 0.28 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீசாய் என்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 2.37 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண் 06 பாலாஜி நகர் பூங்கா பழுது பார்த்தல் பணி | 1.40 | திரு. ஆர்.பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | திரு.S.K. பூபாலன். ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 3.12% அதிகம் |
| 4 | வார்டு எண் 15, நாடார் ரைஸ்மில் சாலை மழை நீர்கால்வாய் பழுது பார்த்தல் பணி | 10.00 | ஒப்பந்தபுள்ளி ஏதும் வரப்பெறவில்லை | |
| 5 | வார்டு எண் 18 வேணுகோபால் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 5.60 | திரு. A.S. புவனேஷ்குமார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திரு.பி. ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.33% அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1. மேற்படி 5 பணிகளில் வரிசை எண். 2, 3 மற்றும் 5 ல் உள்ள 3 பணிகளுக்கு மட்டும் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

2. வரிசை எண் 1 மற்றும் 4 ல் உள்ள பணிகளுக்கு மறுஒப்பந்தபுள்ளி கோரியது மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 722 நாள் 30.06.2025

தீர்மானம் : 1. வரிசை எண் 2,3 & 5 ல் உள்ள பணிகளுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்குகிறது. 2. வரிசை எண் 1 & 4 - ல் உள்ள பணிகளுக்கு மறு ஒப்பந்தபுள்ளி - கோரியது மன்றம் அனுமதி வழங்குகிறது

**<u>பொருள் எண் 5</u>**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2024–25–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் **864/2024/இ1** நாள்**29.05.2025** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணிகளின் பெயர் பொதுநிதி 2024–25 | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளிசத விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி அலுவலகத்திற்கும் மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள நகர்மன்ற கட்டிடத்திற்கும் புதியதாக கண்காணிப்பு கேமரா அமைத்தல் பணி | 3.50 | திரு.R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | 0.15 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.S.K. பூபாலன். ஒப்பந்ததாரர் | 11.03 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண்7 கள்ளுக்கடை மேட்டில் உள்ள MCC மற்றும் MRC அமைந்துள்ள பகுதியில் தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்தல் பணி | 3.40 | திரு.R. பிரகாஷ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.14% குறைவு |
| | | | திரு.S.K. பூபாலன். ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 9.40% அதிகம் |
| 3 | பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கும் புதியதாக 82.50 KVA மின் ஆக்கி சப்ளை செய்தல் பணி | 17.40 | திரு. B.ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட 0.05 % குறைவு |
| | | | ஸ்ரீசாய் என்டர்பிரைசஸ் | மதிப்பீட்டைவிட 0.54% அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **723** நாள் **30.06.2025**

தீர்மானம் : பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சி நகர்மன்றத் தலைவர் அலுவலக பயன்பாட்டில் உள்ள SCORPIO வாகனம் TN 18 BM 5937 காப்பீட்டு தொகை ரூ.59799/- தொகை செலுத்தக்கோரி United India Insurance , சென்னை நிறுவனம் மூலமாக பட்டியல் வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், மேற்கண்ட செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க. எ.ண் 659/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **724** நாள் **30.06.2025**

தீர்மானம் : SCORPIO - TN 18 BM 5937 - காப்பீட்டு தொகை ரூ.59799/- செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

**பொருள் எண் 7**

**பொன்னேரி நகராட்சியில்** 15வது நிதிக்குழு மானியம் Untied Grant 2025 - 2026 திட்டத்தின்கீழ் **கீழ்க்காணும் விவரப்படியான சாலைப்பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண்** 503/2025/**இ**1 **நாள்**21.05.2025 **ன்படி** 11.06.2025 **அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு**.

| வ. எண் | பணிகளின் பெயர்<br>பொதுநிதி 2024–25 | மதிப்பீடு<br>(ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளிசதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 17 நாராயணி அப்பார்மெண்ட் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.00 | திரு.பி. ஜோதீஸ்வரன் ஒப்பந்ததாரர் | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஸ்ரீசாய் என்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 0.12 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் 1 இந்திரா நகர் 3வது தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 5.00 | திரு. எஸ்.பிரகாஷ் ஒப்பந்ததாரர் | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஜே . டி. என்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 7.20 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண் 1 தர்மலிங்கம் 2வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 3.00 | திரு. எஸ்.பிரகாஷ் ஒப்பந்ததாரர் | 0.03 % மதிப்பீட்டை விட குறைவு |
| | | | ஜே . டி. என்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 7.08 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண் 26 டி.எச்.குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.00 | RDS & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| | | | திரு.எஸ். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 7.29% அதிகம் |

**அலுவலககுறிப்பு**

1. மேற்படி 4 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு திட்டப்பணியின் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு.

(ந.க.எண் 503/2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **725** நாள் **30.06.2025**

தீர்மானம் : பணியின் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு.

**பொருள் எண் 8**

பொன்னேரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை வெளிக்கொணர் முறையில் 3 ஆண்டுகளுக்கு தூய்மை பணி செய்யும் பொருட்டு நகர்மன்ற தீர்மானம் எண் 216 நாள் 28.04.2023-ன்படி திரு.M.V.K. முருகன், ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்பட்டு திடக்கழிவு பணி நடைபெற்று வருகிறது. ஓராண்டு பணி முடிவடைந்த நிலையில், ஒப்பந்த விதி எண் 9.3-ன்படி, 1 டன் கழிவுக்கான விலைவிகிதம் ரூ.5054/-வுடன் 10% அதிகரித்து, இவ்வலுவலக உத்தரவு கடிதம் ந.க.எண்.727/2022./எச்1 நாள் 29.11.2024-ன்படி 01.05.2024 முதல் 30.04.2025 வரை ஓராண்டுக்கு 1 டன் கழிவுக்கு ரூ.5560/- வீதம் வழங்கப்பட்டது.

01.05.2025 முதல்மேலும் ஒரு ஆண்டுக்கு தற்போதைய விலையில் ஒப்பந்தக்காலத்தை நீட்டித்து நகர்மன்ற தீர்மானம் எண் 718 நாள் 28.5.25-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்த விதி எண் 9.3-ன்படி, 1 டன் கழிவுக்கான விலைவிகிதம் ரூ.5560/-வுடன் முதலாண்டு விலையில் 10% (5054 x 10%) ரூ.505/- அதிகரித்து 1 டன்கழிவுக்கு ரூ.**6065**/- என்ற புதிய விலையில் **01.05.2025 முதல் 30.04.2026** வரை ஒரு ஆண்டுக்கு **பணி உத்தரவு** வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.** :அத்தியாவசிய பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 727/2022/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 726 நாள் 30.06.2025

தீர்மானம் : திடக்கழிவு மேலாண்மை வெளிக்கொணர்வு முறையில் ஓராண்டு பணி முடிவடைந்த நிலையில் முதலாண்டு விலையில் 10% அதிகரித்து 1 டன் கழிவுக்கு ரூ.**6065**/- என்ற புதிய விலையில் **01.05.2025 முதல் 30.04.2026** வரை ஒரு ஆண்டுக்கு **பணி உத்திரவு** வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்பட்டு அத்தியாவசிய பணி என்பதால் மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>பொருள் எண் 9</u>**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை – இந்தியா திட்டம் 2.0 2023-2024ன் கீழ், புதிதாக வாங்கப்பட்டுள்ள 6000 லி.கொள்ளவு கொண்ட கழிவு நீர் ஊர்தியை பயன்படுத்த, கசடு கழிவு மேலாண்மை துனை விதிகள் (திருத்தம்) 2024 – நகர்மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

பொன்னேரி நகராட்சிக்கு சொந்தமான, புதிய கழிவு நீர் ஊர்தியை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வர மன்றம் அனுமதிக்கலாம்.

1. (ந.க.எண்.148/2024/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 727 நாள் 30.06.2025

தீர்மானம் : .புதிய கழிவு நீர் ஊர்தியை விரைவில் பயன்பாடுக்கு கொண்டு வர மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>பொருள் எண் 10</u>**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் புதிதாக வாங்கியுள்ள கழிவுநீர் ஊர்தியை இயக்க, பணியாளர்களை அமர்த்த விலைப்புள்ளி கோரியதால், Tamilnadu Ex-Servicemen's Corporation Limited (TEXCO) நிறுவனம் கீழ்க்கண்டவாறு ஊதியவிவரம் அளித்துள்ளது :

ஓட்டுனர் ஒருவருக்கு மாத ஊதியம் ரூ.41247/-, உதவியாளர் ஒருவருக்கு மாத ஊதியம் ரூ.41247/- உடன், சேவைக்கட்டணம் 8%. சரக்கு மற்றும் சேவை வரி 18% ஆகும். இதன்படி ஓட்டுனர் ஒருவர் + உதவியாளர் 2 பேருக்கு மாதஊதியம் மொத்தம் ரூ.**157696**/- ஆகிறது.

மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில்

| | |
|---|---|
| ஓட்டுனர் 1நபர் - ரூ.619/- x 30 நாள் = | ரூ. 18570/- |
| உதவியாளர் 1நபர் - ரூ.484/- x 30 நாள் = 14520/-x 2 பேர்= | <u>ரூ. 29040-</u> |
| | 47610/- |
| | ------------------ |

மாதத்துக்கு ரூ.**50,000**/-க்குள் செலவாகிறது.

இந்நகராட்சியில் பாதாளசாக்கடை திட்டம் முடிவடைந்தபிறகு, வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை நியமிக்க ஒப்பந்தப்புள்ளி கோர உத்தேசித்திருப்பதால், மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்த தினக்கூலி அடிப்படையில் உள்ளூர் பணியாளர்களை ( ஓட்டுனர் 1 நபர், உதவியாளர் 2 நபர்) நியமிக்க 6 மாதத்திற்கு தோராயசெலவு ரூ.3.00 (மூன்று) லட்சத்திற்கு பொதுநிதியிலிருந்து வழங்க நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு.** :புதிய கழிவுநீர் வாகனத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வர மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 148/2024/எச்1)

நகர்மன்ற தீர்மான எண் **728** நாள் **30.06.2025**

தீர்மானம் : மாதம் ரூ.**50,000**/- செலவினத்தை வெளிக்கொணர்வு முறையில் 6 மாதத்திற்கு பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>மேசைப்பொருள் எண் 11</u>**

பொன்னேரி நகராட்சியில் **6**வது மாநில நிதிக்குழு பரிந்துரை **2023-24** ன்படி வளர்ச்சி பணிகள் செய்ய புதிய தேரடி தெருவில் உள்ள பேருந்து நிலையத்தில் பழுதடைந்த பேருந்து நிழற்குடையை மாற்றி புதிய பேருந்து நிழற்குடை அமைக்க ரூ.**150.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யட்டதை தொடர்ந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் , குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க அனுமதிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | M/s Glency Docmra Consultants India Private Ltd Chennai -91 | - | **ரூ.** 2.65 **இலட்சம்** (GST **உட்பட**) |
| 2 | M/s Maxcon Town Oanning and Development Private Ltd, Chennai -91 | - | **ரூ.** 3.25 **இலட்சம்** (GST **உட்பட**) |
| 3 | M/s Elcot Designs and Infrastructure Private Ltd, Chennai -91 | - | **ரூ.** 3.10 **இலட்சம்** (GST **உட்பட**) |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. **குறைவு ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்**
2. **மேற்கண்ட தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி அளிக்கலாம்**

(ந.க.எண் 547 /2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **729** நாள் **30.06.2025**

தீர்மானம் : **விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும் தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி அளிக்கிறது**.

## மேசைப்பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மானியம் Tied Grant 2025-26 திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் விவப்படியான 5 மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண் 11919/2022 இஎ2 நாள் 11.06..2025ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1 தர்மலிங்கம் பிரதானசாலை மழைநீர் கால்வாய் அமைத்தல் | 15.75 |
| 2 | வார்டு எண் 1 தர்மலிங்கம் பிரதானசாலை விரிவாக்கம் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 1.85 |
| 3 | வார்டு எண் 24 கண்ணதாசன் 1வது தெரு மழைநீர் கால்வாய் அமைத்தல் | 14.40 |
| 4 | வார்டு எண் 24 கண்ணதாசன் 2 வது தெரு மழைநீர் கால்வாய் அமைத்தல் | 10.00 |
| 5 | வார்டு எண் 25 அம்பேத்கர் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 5.00 |
| | மொத்தம் | ரூ.47.00 |

**அலுவலகக்குறிப்பு**

**மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்**.

(ந.க.எண் 572/2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **730** நாள் **30.06.2025**

தீர்மானம் : 5 மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.

## மேசைப்பொருள் எண் 13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய தேரடி தெருவில் உள்ள பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்குடை மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை இடித்து அப்புறப்படுத்தி புதிய பேருந்து நிழற்குடை அமைக்க திட்ட நிதி கோரப்பட்டுள்ளது. மேற்படி நிழற்குடையின் ஸ்திரத்தன்மை (**Stability**) சான்று அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரியின் மூலம் பெறவும் அதற்கான கட்டணம் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கும்.

**அலுவலகக்குறிப்பு**

1. **மன்றம் அனுமதி அளிக்கலாம்**
2. **மேற்கண்ட தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்**

(ந.க.எண் 547 /2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 731 நாள் 30.06.2025

தீர்மானம் : **மன்றம் அனுமதி அளிக்கவும், தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி அளிக்கிறது.**

**<u>மேசைப்பொருள் எண் 14</u>**

பொன்னேரி நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் மற்றும் பொதுநிதியின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி ந.க.எண் 931/2024/இ1 நாள்.25.06.2025 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு.

<u>ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்</u>

| வ. எண் | பணிகளின் பெயர் பொதுநிதி 2024–25 | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளிசத விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 21 கும்மங்கலம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 0.36 | Land Star Infratech | 0.01% குறைவு |
| | | | OS & Co | 0.15% அதிகம் |
| 2 | வார்டு எண் 1 குன்னமஞ்சேரி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 0.36 | Land Star Infratech | 0.01% குறைவு |
| | | | OS & Co | 0.13% அதிகம் |
| 3 | வார்டு எண் 16 பொன்னேரி அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 0.36 | Land Star Infratech | 0.01% குறைவு |
| | | | OS & Co | 0.15% அதிகம் |
| 4 | வார்டு எண் 2 பெரியகாவணம் அங்கன்வாடி மையத்திற்கு புதிய குழந்தை நேய கழிவறை கட்டுதல் | 0.36 | Land Star Infratech | 0.01% குறைவு |
| | | | OS & Co | 0.13% அதிகம் |

<u>பொதுநிதி 2025 - 26</u>

| வ. எண் | பணிகளின் பெயர் பொதுநிதி 2024–25 | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண் 16, சிவராஜ் தெரு, சிவராஜ் குறுக்கு தெரு மற்றும் இரயில் நிலையம் 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலைஅமைத்தல் | 11.40 | Land Star Infratech | 0.03% குறைவு |
| | | | OS & Co | 2.81% அதிகம் |
| 6 | வார்டு எண் 15, நாடார் ரைஸ்மில் சாலை மழை நீர்கால்வாய் பழுது பார்த்தல் பணி | 10.00 | Land Star Infratech | 0.03% குறைவு |
| | | | OS & Co | 0.38% அதிகம் |

| வ. எண் | பணிகளின் பெயர் பொதுநிதி 2024–25 | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வார்டு எண் 16, அண்ணா தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 6.50 | M/S Land Star Infratech | 0.02% குறைவு |
| | | | M/S OS & Co | 2.78% அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **732** நாள் **30.06.2025**

தீர்மானம் : பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>மேசைப்பொருள் எண் 15</u>**

பொன்னேரி நகராட்சி நகர்மன்ற தலைவர் அலுவலக பயன்பாட்டில் உள்ள SCORPIO வாகனம் எண் TN 18 BM 5937-ன் டயர்கள் நான்கும் மிகவும் பழுதடைந்து உள்ளதால், அதனை மாற்றி புதிய நான்கு டயர்கள் வாங்கி பொருத்த அங்கிகரிக்கப்பட்ட நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரப்பட்டதில். குறைந்த விலைப்புள்ளி ரூ.54000/-ம் என அளித்துள்ள Sree Jayam Tyre நிறுவனம் பொன்னேரி வழங்கிய விலைப்புள்ளி ஏற்று தொகை வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியது மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்: 864 /2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் **733** நாள் **30.06.2025**

தீர்மானம் : நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**<u>மேசைப்பொருள் எண் 16</u>**

பொன்னேரி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் மேற்கொண்டதாலும் இயற்கை இடர்பாடுகளினாலும் கீழ்க்காணும் விவரப்படியான சாலைகள் மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே மேற்படி சாலைகளை சீரமைத்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் .

| வ.எண் | பணிகளின் பெயர்<br>பொதுநிதி 2024-25 | மதிப்பீட்டு தொகை<br>(ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண் 15, பஜனை கோயில் தெரு மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி, | 3.70 |
| 2. | வார்டு எண் 15, அம்பேத்கர் முதல் குறுக்குத்தெரு பேவர்பிளாக் அமைத்தல் பணி | 1.90 |
| 3 | வார்டு எண் 15, வரதப்ப நாயக்கர் முதலாவது குறுக்கு தெரு, இரண்டாவது குறுக்கு தெரு மற்றும் மூன்றாம் குறுக்கு தெரு பேவர்பிளாக் அமைத்தல் பணி | 9.60 |
| 4 | வார்டு எண் 12, சிவன் கோயில் அருகில் உள்ள மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளி (பொன்னேரி தெற்கு) வளாகத்தில் பேவர் பிளாக் அமைத்தல் பணி | 5.00 |
| 5 | டி.எச்.ரோடு மற்றும் ஆர்.எஸ்.ரோடு இணைப்பு சிறுபாலம் அமைத்தல் | 7.30 |
| 6 | வார்டு எண்.24, அண்னை அவென்யூ பூங்கா மேம்பாடு செய்தல் பணி | 19.00 |
| 7 | பெரியகாவணம் மயான சாலை (பகுதி) இரு பக்கம் தடுப்பு சுவர் அமைத்தல் பணி | 9.90 |
| 8 | பெரிய வேண்பாக்கம் சாலை, ராஜீவ் அப்பார்ட்மென்ட் 1-வது தெரு, மற்றும் 2-வது தெருவில் ஈரக்கலவை அமைத்தல் பணி | 7.50 |
| 9 | வார்டு எண்.10, தேரடி தெரு (மேற்குபகுதி) விடுபட்ட பகுதி வடிகால் வாய் அமைத்தல் | 18.50 |
| 10 | வார்டுஎண்.11, தாயுமான் செட்டி தெரு விடுபட்ட பகுதி வடிகால்வாய் அமைத்தல் | 10.75 |
| 11 | வார்டு எண்.25 பி.ஆர்.கே நகர் 2வது தெரு மற்றும் பி.ஆர்.கே நகர் விடுபட்ட பகுதி சிமெண்ட் கான்கிரீட் அமைத்தல் பணி | 10.90 |
| 12 | வார்டு எண்.25 மற்றும் 27 ஸ்ரீசாய் நகர் மற்றும் நேதாஜி நகர் 3-வது தெரு விடுபட்ட பகுதி சிமெண்ட கான்கீரிட் சாலை அமைத்தல் | 10.75 |
| 13 | வார்டு எண்.6, கலைஞர் தெரு மற்றும் எஸ்.எம்.ஆர் நகர் விடுபட்ட பகுதி சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 4.00 |
| 14 | பழைய நகராட்சி அலுவலகம் வண்ணப்பூச்சு மற்றும் கழிவறைகள் பராமரிப்பு செய்தல் | 5.00 |
| 15 | இந்நகராட்சி பகுதியில் சாலையில் ஏற்பட்ட பள்ளங்களை ( Patches ) சீர் செய்தல் பணி | 5.00 |
| 16 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வடிகால்வாய்கள் தூர்வாரும் பணி | 5.00 |
| 17 | வார்டு எண் 24 துர்கா நகர் 1 - வது குறுக்கு தெரு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 4.60 |
| 18 | வார்டு எண் 19 நண்பர்கள் தெரு பேவர்பிளாக் சாலை மறு சீரமைப்பு பணி செய்தல் | 1.65 |
| 19 | புதிய தேரடி தெருவில் வடிகால்வாய் கட்டும் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அகற்றும் பணி | 2.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 864/2024/இ1)

**நகர்மன்ற தீர்மான எண் 734 நாள் 30.06.2025**

**தீர்மானம் : மன்றம் அனுமதி அளிப்பதோடு, தொகையினை நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்குகிறது.**

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவளுளூர் மாவட்டம்